# கன்னட சைனீகர் சமூக தலைமைச் சங்கம்

KANNADA SAINEEGAR SAMUGA THALAIMAI SANGAM (Reg. No.412/2004)

எண்.50, (பழைய எண்.334) வால்டாக்ஸ் ரோடு, சென்னை–600 079.

போன் : 044–2529 1111, 9444 653 643 / 8925 829 829

## பெண் பருவம் அடைதல்

பருவம் அடைந்த பெண்ணை வீட்டில் சேர்க்கும் பொழுது செய்ய வேண்டியவை.

**பெண்வீட்டில் தேவையானவை :**

மஞ்சள், குங்குமம், சந்தனம், தேவையான அளவு பூ, வாழைப்பழம், வெற்றிலை பாக்கு, (நலுங்கு வைத்தவர்களுக்கு கொடுக்க தேவையான அளவு) ஸ்வீட், காபி, சாப்பாடு.

1. பெண்ணிற்கு காலையில் தலைக்கு ஊற்ற வேண்டும்.

2. பெண்ணின் வீட்டில் காலை நேரத்தில் ஐயர் வைத்து பூஜை செய்ய வேண்டும்.

3. சொந்த பந்தங்கள் வந்தபின் நல்ல நேரம் பார்த்து மற்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

4. பெண் உட்காரும் மனப்பலகையின் கீழ் வெற்றிலை, பாக்கு, பழம், பச்சாசி வைக்க வேண்டும்.

5. இருபுறமும் குத்து விளக்கு ஏற்றி வைக்க வேண்டும்.

6. முக்காலி மீது தட்டில் குங்குமம், சந்தனம், பன்னீர், மஞ்சள் கலந்த அரிசி, பால் பழம் (டம்ளரில் ஸ்பூனுடன்) வைக்க வேண்டும்.

7. நலுங்கு வைத்தவர்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பூ வாழைபழம் வைத்து கொடுக்க தயார் செய்து வைக்க வேண்டும்.

8. ஆராத்தி எடுக்க தட்டில் மஞ்சள் தூள். சுண்ணாம்பு, தண்ணீரில் கலந்து கரைசலின் மேல் ஒரு வெற்றிலையில் கற்பூரம் வைத்து இருக்க வேண்டும்.

9. பெண் வலதுபுறமாக சுற்றிவந்து அனைவருக்கும் வணக்கம், செலுத்தியபின் மனப்பலகையின் மேல் உட்கார வேண்டும்.

10. தாய் மாமன் வீட்டிலிருந்து வரிசை சாமான் எடுத்து வந்து வைக்க வேண்டும்.

<u>தேவையானவை :</u> மஞ்சள், குங்குமம், பூ, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சர்க்கரை, தேவையான பழங்கள், வளையல், சீப்பு, கண்ணாடி, பட்டுபுடவை, ஜாக்கெட், 2 சிறிய மாலை வாங்கிவர வேண்டும்.

11. மூத்த சுமங்கலி பெண் (பாட்டி) பெண்ணிற்கு குறுக்காக 2 மாலை அணிவிக்க வேண்டும்.

12. பெண்ணிற்கு 11 பேர் நலுங்கு வைக்க வேண்டும். (ஒற்றைப்படையில்)

13. பெண்ணிற்கு (கடைசி நபர்) 11 வது நபர் ஆராத்தி எடுக்க வேண்டும்.

14. பெண் பெரியவர்களின் முன்னிலையில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும்.